DINAKARAN

28 MAR 2022

PAGE 5

# புதுச்சேரி பல்கலையில் தேசிய கருத்தரங்கம்

புதுச்சேரி, மார்ச் 28: புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில் இந்திய அறிவு முறைக்கு வட்டார இலக்கிய பாரம்பரியத்தின் பங்களிப்பு என்கிற தலைப்பில் இரண்டு நாள் தேசிய கருத்தரங்கம் நடந்தது. இக்கருத்தரங்கம் சமூக அறிவியலுக்கான இந்திய அவையத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. இதில் துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கி பேசுகையில், காலனிய மற்றும் மேற்கத்திய கலாசார தாக்கத்தால் இன்றைய இளைய சமூகம் இந்திய அறிவுசார் பாரம்பரியத்தை இழந்து நிற்பது வேதனைக்குரியது. இத்தகைய கருத்தரங்குகள் மட்டுமே இந்த குறைபாட்டை நீக்கி பாரம்பரிய அறிவுசார் அமைப்புகளை கல்வி முறையின் ஒரு முக்கியமான அங்கமாக்க இயலும் என்றார்.

ஆந்திர மத்திய பழங்குடி பல்கலைக்கழக துணைவேந்தர் கட்டிமணி பங்கேற்று இன்றைய தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். பள்ளி மற்றும் கல்லூரி பாடத்திட்டத்தில் இந்திய பாரம்பரிய அறிவு முறைகளை உள்ளடக்க வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டினார். நிகழ்ச்சியில் மனிதவியல் புல முதன்மையர் கிளமெண்ட் லூர்து, ஆங்கிலத்துறை தலைவர் மார்க்ஸ், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் உஜ்வல் ஜனா மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆய்வறிஞர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சார்பில் நடந்த தேசிய கருத்தரங்கில் துணைவேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

DINAMALAR

28 MAR 2022

PAGE 2

# மாற்றுத்திறனாளி அமைப்புகளுக்கு இரண்டு நாள் சிறப்பு பயிற்சி முகாம்

**புதுச்சேரி, மார்ச் 28–**

மாற்றுத்திறனாளி அமைப்பு பிரதிநிதிகளுக்கான இரண்டு நாள் சிறப்பு பயிற்சி முகாம், புதுச்சேரி பல்கலையில் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக்கழக சிறப்பு உயர் கல்வி மையத்தில் நடந்த முகாமில் 30 அமைப்புகளை சேர்ந்த 75 பேர் பங்கேற்றனர்.

துவக்க விழாவில் மதன்மோகன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் சிதம்பரம், முகாமின் நோக்கம் குறித்து பேசினார். அமைப்புகளின் வாயிலாக மத்திய, மாநில அரசுகளின் திட்டங்களை எவ்வாறு கொண்டு சேர்ப்பது, மாற்றுத்திறனாளிகளின் கணக்கெடுப்பின் அவசியம் குறித்து விளக்கினார்.

துணைவேந்தர் குர்மித் சிங், பல்கலையில் மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ள வசதிகள், வாய்ப்புகளை விளக்கினார்.

சமூக நலத்துறை செயலர் உதயகுமார், அரசின் நலத் திட்டங்கள் குறித்தும் மாற்றுத்திறனாளி அமைப்புகளின் பங்களிப்பின் அவசியம் குறித்தும் யூ.டி.ஐ.டி., கார்டின் நிலை குறித்து விவரித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான மனித வளத்தை மேம்படுத்திட பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து பேராசிரியர் முஹந்தின், மாற்றுத் திறனாளிகளின் சிறப்பு இயல்புகள் குறித்து உளவியல் துறை பேராசிரியர் ரங்கையா ஆகியோர் பேசினர். குப்புசாமி நன்றி கூறினார்.




■ புதுச்சேரி பல்கலையில் நடந்த மாற்றுத்திறனாளிகள் அமைப்புகளுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் துவக்க விழாவில் துணைவேந்தர் குர்மித் சிங் பேசினார்.